திருநுதி

(ஸ்ரீ ஸ்துதி)

ஸ்ரீ வேதாந்த தேசிகனது
ஸ்ரீ ஸ்துதி இருபத்துநான்கு சுலோகங்களில்
அநுக்கிரகதாயகமாயுள்ள பதினாறு சுலோகங்களைச்
சிவத்தியானாநந்த மஹர்ஷி தமிழிற் பாடியது.

1. அளவறு விபவப் பிரசித்தி யுடனே
அணிசுபங் கட்கெலாம் சுபமாய்த்
தளமுறு சுயமார் காந்தியை அணிந்து
மதுவினைச் சயித்தவன் மார்பை
வளமுறும் இருப்பாய் வகித்(து)இக பரத்தின்
மகிமையை நரர்கள் வேண்டுவதாய்
உளபுகழ் உருவின் **திரு**எனும் உனையே
கதியிலேன் சரணம் உற்றனனே.

2. தோன்றிய தரிய பாற்கடல் அன்றேல்
துகள் அறும் *எக்கியத் தலத்தோ,
ஊன்றியே அமர்ந்த இடமது மரைக்கா(டு)
அன்றெனில் †விண்டுவின் உரமோ,
பூன்ற செல்வந்தான் அகிலங்கள் அன்றேல்
பொருந்துறு ‡திப்பிய பதமோ,
ஏன்றுள தேவீ, எல்லையில் குணத்தோய்,
எவண்உனைப் புகழ்வர்சிற் றுணர்வோர்!

[* சீதையவதாரம். † இலக்குமி. ‡ பரமபதம்.]

3. பிறர்புகழ் பெருமை யளிக்கின்றாய் நீதான்
பிறங்கு மெய்யினர் புகழ்கேட்டே;
கறங்குறும் இதரக் கதியிலேன் துதிசெய்
கருத்துளேன் காரியம் முடித்தே
பிறங்குவேன்; உனது திருவடிச் சேவை
பிறன்எவன் புரியுற விழையான்,
அறந்தரு சேமம் அல்லொடு பகலும்
அடைவதற்(கு) அருநெறி யெனவே?

4. உலகமே உடலாய்க் கொண்டுள எவன(து)
உள்ளத்தாற் சராசர உவைகள்
இலகுறத் தோன்றி ஒளிர்ந்தி ருந்தழியும்
இன்னதோர் சுபநிறைந் ததுவாய்
நலமுற யோகின் அமர்ந்தவர் இலக்கா
நாடிநிற் கின்றஅப் பூன்ற
சொலஇயலாத *ஒளியும்உன் பஞ்சிச்
சீறடிக் குறிக்கொடே துலங்கும்.

[* விஷ்ணு.]

5. முகுந்தனிற் கலந்திச் சகங்களுக் கிறைவி
யாகநீ மொழியநிற் கின்றாய்;
தகும் இலக்குமி, இந்திரை, திருமாலின்
தலைவி, பாற்கடல் வளர் தநயை
மிகுமறை யுனது பதுமை முற்பெயராற்
பணயம் செய் நாமத்தை விழைவோர்
†அகமுறு பிறவிச் சக்கரத் துழலும்
அதனை எந்நாளுமே அடையார்.

[† பாபம்.]

6. உலகினுக் கரசென் றுன்னையே சிலரும்
உன் ‡**அன்**(**பு**) என்(று) இதரரும் உரைப்பர்;
கலகம் செய்வதுவே கருத்தினர்; வெள்ளம்
கடுகி ஆழ்ந்(து) எழுபவர்போல், அம்
மலினபுத் தியரால் என்பயன்? உனது
மனம் உவப்(பு) அடைகுவான் லீலை
பலபுரி பகவான், சுருதி உட்பொருள், நீர்
பரம்பொருள் இருவரும் எமக்கே.

[‡ பிரியன், விஷ்ணு.]

7. சங்கடம் அடைந்தோர் துன்பங்கள் தீர்க்கும்
சங்கற்பம் படைத்த விண்டுவினின்
பங்கின்அன்(பு) உறையும் மங்கலை எனவே
பகருவர்; பாற்கடல் அதுதான்
இங்(கு) அலையாகப் பரவினும் அதனின்
இனிமையை விட்டிரா ததுபோற்
பொங்குறும் அவன்றன் பிறப்புத் தோ(று)அவனைப்
பொருந்தி நீ அநுகுலத்(து) உறைவாய்.

8. அரி மரகத்தின் அகலத்தில் உனது
முதலுரு, அழ்கினை அளித்துப்,
பரும் உயர்தனத்தின் மெலிநடு அடைந்து,
பாரினில் உருக்கி ஊற்றிய பொன்
புரை ஒளிவீசி, ஆனந்தக் கடலாப்
பொருந்(து) அவதாரங்கள் தோறும்
நிரையுறு திரையே இதுவெனப் பரவி,
நிறைகளிப்(பு) அளித்(து) ஒடுங்குறுமே.

9. படைப்புமுற் பரந்த வாக்கெலாம் எவள்தன்*
விபூதியே எனப் பகர்வாரோ,
நொடித்த †யார் புருவத்(து) ‡ஏமல ரானுக்(கு)
ஈசனும் நொடியிற் கிங்கரனாம்,
படைத்த ஆயிரங்கண் ஏக லட்சியத்தின்
§எவளையே பார்க்குறும், அந்தத்
தொடுத்தமூ வர்கள்தம் தோற்றமார் நிலைமை
தோய்ந்த(து)உன் சிறு நினைப்பதினே.

[* சரஸ்வதி. † பார்வதி. ‡புஷ்ப பாணன். §இந்திராணி.]

10. கணவன் முன்னிலையிற் கடிமரை மலராம்
காவல்சார் பீடத்தின் அமர்ந்த,
தணவறு சுதையின் ஓட்டத்தின் பின்னர்ச்
சமுத்திரத் துதித்த உன்றன்னை
வணமலர் மாரி மூடிய புவனத்(து)
அரசுவாப் புட்கலா வர்த்தம்
எணு(ம்)முகில் கொண்டே பொற்குடத் தெடுத்து
மஞ்சனம் இயற்றின் மாதோ.

11. துயரினர்க் காக்கும் விரதத்தைக் கைக்கொண்(டு)
அமுதுகு முகிலெனத் தோய்ந்தே
அயர்வுதீர் வைகல் கிண்கிணி வாய்க்கொள்
அலரெனச் செல்லும் உன்கடைக்கண்
மயர்(வு)அற எந்தத் திக்கினில் விழுமோ
வளரும்அத் திக்கெலாம் ஸம்பத்(து)
உயர்வுற எழுந்(து) இங்(கு) ஒன்றின்முன் ஒன்றாய்
ஓங்குற வல்விரைந் துறுமே

12. *உங்களைப் பெறவென் றெண்ணி ஏகாந்த
நிட்டையி னுறைந்(து) யோகத்துக்(கு)
அங்கமாம் பொருளை அடையும் இச்சையினை

அகத்தினிற் றரித்தவர்க்(கு) அவர்தாம்
இங்கு வேண்டியநற் பொருள்களின் தாரை
இரும்புவி யிடத்தினோ, குபேரன்
தங்கும் இல்லிருந்தோ, அம்பர நின்றோ,
சமுத்திரம் தன்னினோ வருமே.

[* இப்பாட்டைக் காஞ்சியில் தாயார் சந்நிதியிற் பாடி ஒரு ஏழைப் பிராஹ்மணனுக்காகப் பொன்மழை பெய்வித்தார் தேசிகன் என்ப. இதனாலேயே இந்நூலுக்குக் கனகதாரஸ்தவம் என்ற பெயர் வந்ததென்றும் கூறுவர் சிலர்.]

13. நன்மைகள் யாவும் அடைகவும், ஆதி
அகப்பகை நலிக்கவும், பாவத்
தின்மைகள் யாவும் ஓட்டவும், அநாதி
அவித்தையைச் சிதைக்கவும், பிறவித்
தன்மைகள் ஒழிக்கும் உந்தயைக் கோட்டைச்
சரணென் அடைகுவர், மலம்என்
புன்மைகள் ஒழித்த மனத்தினர், அம்மே,
புருடனும் மாலுடை அன்பே.

14. சங்கடம் தீர்க்கும் திருஉறை தலமாம்
திரிதச மகிளைகள் சிரத்தின்
அங்கமா(ம்) மாலை அலங்கரித் திடும்உன்
அடிகளை வணங்குதல்; சிறிது
தொங்கிய சிரத்தின் உபாசனை புரியும்
தூயவர், இவ்வுடல் கழன்றே
பொங்குறு தமம்இல் வாஸு தேவன்றன்
†பொழிலினில் தகைசிறந் துறைவார்.

[† உலகத்தில்.]

15. ஆய்ந்திடின் தாய்நீ ஆயினை; பகவான்
வாசுதேவன் பிதா ஆனான்;
தோய்ந்தஉம் இருவர் தயைக்கும் நான்ஆனேன்
சொற்பெறு பாத்திரம் ஆக;
தேர்ந்திடா(து) அளித்தார் தேசிகர் எனைநும்
சேவக னாய்இருக் கெனவே;
'வாய்ந்(து) உனக்(கு) என்ன வேண்டும்?' என்பதின்உன்
வாண்முகம் குறுநகைத் தன்றே.

16. மங்க லங்கட்குக் குறைவிலா நிதியாய்,
வருணிக்கும் வகைபெறாக் கருணை

தங்கும் எல்லையதாய், நித்தியா நந்தம்
சார்உரு வாகி, வேதாந்த தத்(து)
இங்கு மந்தார மாலையாய், மதுவை
இறுத்தவன் திப்பியத் திருவாய்,
எங்குறு புவனத் *தேநுவாம் தேவி
என்றும்என் மனத்(து) உறைபவளே.

[* காமதேனு.]

நூற்பயனும் வரலாறும்

தீஞ்சுவை வாக்கோன் தேசிகன் உரைத்த
திருநுதி இருபத்து நான்கில்
மீஞ்சுவை பொதிந்த சோடசப் பாவை
மிகுசிவத் தியான ஆநந்தன்
தேஞ்சுவை துளிக்கத் தமிழினிற் பாடித்
திருவினின் கடாட்சத்தை யடைந்தான்;
நாஞ்சுவைத் ததையே நலமெலாம் அடைய
நாடுவோம் உலகினீர் வாரீர்.